**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 236/2013 c/w அ.வ.எண் 61/2014</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 29.06.2026 |
| **பெயர்** | **பாஸ்கர்** |
| **த/பெ** | **வீரராகவன்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம் – 12.22. p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

14. எனது மாமியார் முருகா என்கிற முனியம்மாளின் பெயரில் விடுதலைப்பத்திரம் வைத்து என் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதினார் அதில் அந்த 96 செண்ட் அடங்குமா என்றால் அடங்கும். அதேபோல் என் மனைவி என் பெயருக்கு எழுதப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் அந்த 96 செண்ட் அடங்குமா என்றால் அடங்காது. அந்த 96 செண்ட் நிலத்தை விட்டு விட்டு மீதமுள்ள நிலத்தை எழுதியதற்கான காரணம் என்ன என்றால் மேற்சொன்ன 96 செண்ட் மட்டும் அல்லாமல் பல சொத்துக்கள் என் பெயரில் எழுதவில்லை அதனுடன் இந்த 96 செண்ட் அடங்கும். வா.சா.ஆ 8 தான் என் மனைவி என் பெயருக்கு எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். என் பெயருக்கு எழுதிய செட்டில்மெண்ட் சொத்திற்கான ஸ்வாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் ஒப்படைக்ககப்பட்டது. செட்டில்மெண்டிற்கு பிறகு என்படி ஸ்வாதீனம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான்.

15. ஆனால் நான் தாக்கல் செய்த வழக்கில் என்னிடம் ஸ்வாதீனம் ஒப்படைக்க கோரி தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அப்படி இருக்கையில் மேற்சொன்னபடி ஸ்வாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதா கூறியது தவறு என்றால் சரிதான். ஸ்வாதீனம் என்னிடம் நேரடியாக ஒப்படைக்கவில்லை. என் மாமியாரிடம் தான்

ஸ்வாதீனம் உள்ளது. ஆவணத்தில் மட்டும் தான் என்னிடம் ஸ்வாதீனம் ஒப்படைத்ததாக உள்ளது. வாதிகள் தரப்பில் கூறப்பட்ட கிரையங்கள் உண்மையானது என்றால் சரியல்ல. என் மனைவிக்கு 18 வயது எப்போது பூர்த்தியானது என்றால் 1998. என் மனைவி மேஜர் ஆனதிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மேற்சொன்ன கிரையங்கள் செல்லாது என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு அது போல் கிரைய ஆவணங்கள் இருந்த விவரம் தெரியாது. அதனால் எடுக்கவில்லை. 26.07.1990—ல் ராணியம்மாள் மீது கிரையப்பத்திரம் பதிவாகி இருந்தது என்றால் சரிதான். அந்த பத்திரம் செல்லாது. மேசொன்ன தேதியில் இருந்து 12 ஆண்டுகளுக்கு உள்ளாக அந்த ஆவணம் செல்லாது என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 02.08.1999 ல் ராணியம்மாள் , கேசவநாயுடு மீது பத்திரம் எழுதி வைத்தார் என்றால் ஆம் ஆனால் அந்த பத்திரம் செல்லாது.

16. 03.12.1997—ல் கேசவநாயுடு பெயரில் கிரையப்பத்திரம் பதிவாகி இருந்தது என்றால் சரிதான். அண்ணன்களின் சொத்தை தங்கை விற்பனை செய்ததாக உள்ளது அதனால் அது செல்லாது. என் மாமியாரை ஏமாற்றி பட்டா வாங்குவதாக கூறி தவறுதலாக பத்திரங்கள் ஏற்படுத்தியதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் எனது மாமியாரை ஏமாற்றி பத்திரங்கள் ஏற்படுத்தி இருந்தால் இந்த வழக்கு தாக்கல் செய்த போது நான் வாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்த போதும் என் மாமியார் உயிருடன் இருந்த நிலையில் அவர் அது குறித்து தனியாகவோ அல்லது நான் தாக்கல் செய்த வழக்கிலோ இருவரும் சேர்ந்தோ தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், நான் தாக்கல் செய்த வழக்கில் அவரை பிரதிவாதியாக காண்பித்தது தவறு என்றால் சரியல்ல. என் மாமியாருக்கு எழுதப்படிக்க தெரியாத காரணத்தினால் அவர் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

17. நான் தாக்கல் செய்த வழக்கில் என் மனைவி மூலமாக உரிமை கோருகிறேனா அல்லது தனியாக உரிமை கோருகிறேனா என்றால் என் மனைவி எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில், நான் தனியாகவே உரிமை கோருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ—5 எனது மாமியார் மற்றும் மைத்துனர் இருவரும் சேர்ந்து என் மனைவி பெயருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் அதன் மூலமாவது என் மனைவிக்கு நேரடியாக ஸ்வாதீனம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் ஆவணம் மூலமாக மட்டுமே ஒப்படைக்கப்பட்டதே தவிர, நேரடியாக ஒப்படைக்கவில்லை. என் மாமியாரோ அல்லது என் மனைவியோ அல்லது அவர்கள் மூலமாக உரிமை கோரும் நானோ வாதிகளின் பெயரில் உள்ள ஆவணங்கள்

செல்லாது என்று உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நடவடிக்கை எடுத்துள்ளோம். என்ன நடவடிக்கை எடுத்தோம் என்றால் நான் தாக்கல் செய்த வழக்குகள் தான் நாங்கள் எடுத்த நடவடிக்கைகள்.

18. நான் தாக்கல் செய்த வழக்குகளில் நான் கோரியுள்ள பரிகாரம் காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கூறும் குத்தகை யார், யாருக்கு கொடுத்தது என்றால் எனது மாமியார் முருகம்மாள் அவரின் தந்தை கேசவநாயுடுவிற்கு குத்தகைக்கு விட்டிருந்தார். கேசவநாயுடு இறப்பிற்கு பிறகு யாருக்கு குத்தகைக்கு விடப்பட்டது என்றால் அவரின் மகன்களுக்கு விடப்பட்டது. அதே போல் ஒரு குத்தகைக்கு எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றால் இல்லை சொந்த தந்தை மற்றும் சகோதர்கள் என்ற காரணத்தினால் ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தவில்லை. நான் கூறியது போல் எந்த குத்தகையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்படி குத்தகை முறிவு அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. குத்தகை உறவு அற்றுப்போய்விட்டதாக ஏதேனும் அறிவிப்பு அளித்தோமா என்றால் இல்லை.

19. நான் தான் தவறாக செட்டில்மெண்ட் ஏற்படுத்தி கொண்டு வாதிகளின் ஸ்வாதீனத்தில் இடையூறு செய்ய முயற்சித்தேன் என்றால் சரியல்ல. உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் வழக்கு சொத்தினை குறித்து வாதிகளுக்கு எதிரிடை ஸ்வாதீன உரிமை வந்துள்ளது என்றால் சரியல்ல. 12.08.2013 ல் தான் வாதிகள் மீது உள்ள கிரைய ஆவணங்கள் குறித்து தெரியவந்தது. அதனால் வாதிகள் தாக்கல் செய்த வழக்கு வாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பாக வேண்டும் என்றும் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.53.p.m**